ශ්‍රී ලංකා නැගෙනහිර විශ්ව විද්‍යාලය

கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

EASTERN UNIVERSITY, SRI LANKA



# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை - 2015
# ANNUAL REPORT

**கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை**

# வருடாந்த அறிக்கை - 2015

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தூரநோக்கு | - | 01 |
| 2. | நோக்கம் | - | 01 |
| 3. | உபவேந்தரின் மதிப்புரை | - | 01 |
| 4. | வளங்கள் மற்றும் மாணவர் விபரம் | - | 05 |
| 5. | உள்ளூர் மாணவர்களின் விபரம் | - | 06 |
| 6. | வெளிநாட்டு மாணவர்களின் விபரம் | - | 07 |
| 7. | கல்விசார் ஊழியர்களின் விபரம் | - | 07 |
| 8. | கல்விசாரா ஊழியர்களின் விபரம் | - | 08 |
| 9. | ஆராச்சிகள் கண்டுபிடிப்புக்கள், வெளியீடுகள் பற்றிய விபரம் | - | 09 |
| 10. | நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றின் விபரம் | - | 11 |
| 11. | பெற்ற விருதுகளின் விபரம் | - | 12 |
| 12. | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைகள் தொடர்பான விபரம் | - | 14 |
| 13. | மீண்டெழும் செலவீனத்தின் விபரம் | - | 14 |
| 14. | மூலதனச் செலவு விபரம் | - | 15 |
| 15. | செயற் திட்டங்களின் விபரம் (உள்ளூர், வெளிநாட்டு நிதி) | - | 15 |
| 16. | செயற் திட்டங்களின் செலவு விபரம் (உள்ளூர்/வெளியூர் நிதி) | - | 16 |
| 17. | நிதி நிலைமை விபரம் (செலவு) | - | 17 |
| 18. | நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்) | - | 18 |
| 19. | நிதி செயற்றிறன் ஆய்வு - 2015 | - | 19 |
| 20. | 2015ஆம் ஆண்டில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம் | - | 19 |
| 21. | ஏதேனும் பிற விடயங்கள்/இவ்வறிக்கை தொடர்பான செயற் திறன் | - | 20 |
| 22. | 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | - | 21 |
| 23. | 2015ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | - | 35 |

## 1. தூரநோக்கு:

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நோக்கமானது கற்பித்தல் ஆராய்ச்சி மற்றும் புலமை ஆகியவற்றில் அதி சிறந்த தரத்தை பேணுதல், நன்மை பெறக்கூடிய சகலருக்கும் கல்வி மற்றும் பயிற்சிக்கான மிகச் சிறந்த வாய்ப்புக்களை பல்கலைக்கழகத்தின் உள்ளக மற்றும் வெளியகப் பீடங்கள், வளாகங்கள் மற்றும் ஏனைய வசதிகள் ஊடாக வழங்குதல், கற்றல் மற்றும் ஆராயச்சிகளின் பிரயோகங்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் சமூக நலன்கள், செழுமை மற்றும் கலாச்சாரங்களை முன்னேற்றுதல் மற்றும் இத்தகைய இலட்சியங்களை வினைத்திறனுடன் எய்துவதற்காக வளங்களை நிர்வகித்துப் பாதுகாத்தல் ஆகியனவாகும்.

## 2. நோக்கம்:

பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்படும் நிலைமை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் போட்டி ரீதியான நயத்துடன் உயர் கற்கைகளுக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய தலைசிறந்த தேசிய மையமாக விளங்குவதே இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தினது நோக்கமாகும்.

## 3. உபவேந்தரின் மதிப்புரை

### அ. பல்கலைக்கழகம் பற்றிய சிறுஅறிமுகம்:

***கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையானது*** 1981ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி விஞ்ஞானம் மற்றும் விவசாய பீடங்களுடன் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. அது பின்னர் முழு அளவிலான பல்கலைக்கழகமாக 1996ஆம் ஆண்டு மேலதிக பீடங்களான வர்த்தகமுகாமைத்துவ பீடம் மற்றும் கலை கலாசார பீடங்களுடன் தரமுயர்த்தப்பட்டது. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது 2006ஆம் ஆண்டு ஆறு திணைக்களங்களான மனித உயிரியல் திணைக்களம், துணை சுகாதார விஞ்ஞான திணைக்களம், நோய் உடற் தொழிற்பாட்டியியல் திணைக்களம், மருத்துவ, கல்வி மற்றும் ஆராய்ச்சி திணைக்களம், பிணியியல் விஞ்ஞான திணைக்களம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு திணைக்களம் என்பவற்றுடன் ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக ***திருகோணமலை வளாகமானது*** தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரண்டு பீடங்களுடன் 2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது சித்த வைத்திய அலகையும் கொண்டுள்ளது.

***சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகமானது*** 2005ஆம் ஆண்டு பங்குனி மாதம் 1ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல், கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும் வரை சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி எனும் பெயருடன் சமூக விவகார மற்றும் இந்து கலாசார அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தது.

**பீடங்களும் கற்கைகளும்**

- **விஞ்ஞன பீடமானது** ஐந்து திணைக்களைக் கொண்டிருப்பதுடன் உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகியவற்றில் விஞ்ஞானமாணி பட்டத்தினையும் (B.Sc.), விஞ்ஞானக் கல்வியில் விஞ்ஞான முதுமாணி (M.Sc.), முதுதத்துவமாணி (M. Phil.) மற்றும் கலாநிதி (Ph.D.) ஆய்வுப் பட்டத்தையும் வழங்குகிறது.

- விவசாய பீடமானது ஆறு திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன் விவசாயத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தினையும், விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் வழங்குகிறது.
- கலை கலாசார பீடமானது ஒன்பது திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன் கலைமாணி (B.A), கல்வியியல்மாணி (B.Ed.), கலை முதுமாணி (M.A), கல்வியியல் முதுமாணி (M.Ed.), முதுதத்துவமாணி (M.Phil) மற்றும் கலாநிதி (Ph.D.) ஆகிய பட்டங்களை வெவ்வேறு துறைகளில் வழங்குகிறது.

- வர்த்தக முகாமைத்துவ பீடமானது மூன்று திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன், வர்த்தகமாணி (B.Com), வணிக முகாமைத்துவமாணி (BBA), முகாமைத்துவ பட்டப் பின்படிப்புக் கற்கை, வணிக முகாமைத்துவ முதுமாணி (MBA), மற்றும் பொருளாதார அபிவிருத்தி முதுமாணி (MDE) ஆகிய பட்டங்களையும் வழங்குகிறது.
- சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது ஆறு திணைக்களங்களைக் கொண்டிருப்பதுடன் மருத்துவமாணி மற்றும் சத்திர சிகிச்சைமாணி (MBBS) மற்றும் தாதியியலில் விஞ்ஞானமாணி (Nursing in B.Sc.) ஆகிய பட்டங்களை வழங்குகிறது.
- **திருகோணமலை வளாகமானது** தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரு பீடங்களையும், சித்த வைத்திய அலகையும் கொண்டிருப்பதுடன், கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி, மொழியியல் மற்றும் தொடர்பாடல் கற்கைகளில் கலைமாமணி, கணனி மாணி, தகவல் தொழிநுட்ப மாணி, சித்தமருத்துவமும் சத்திரசிகிச்சையும் இளமாணி பட்டங்களையும் வழங்குகிறது.
- மேலும் பீடங்கள் **வெளிவாரி பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தினூடாக** வெளிவாரிப் பட்டக்கற்கையை பல்கலைக்கழக கல்வி வாய்ப்பினை அதிகளவான மாணவர்கள் பெறுவதற்காக வழங்குகிறது.

## ஆ. சாதனைகள்

### 1. 2015ல் பெறப்பட்ட ஆராய்ச்சி விருதுகள்

- விஞ்ஞான சஞ்சிகைகளுக்கான ஜனாதிபதி விருதினை விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கலாநிதி ஏ. ஜி. ஜோன்பிள்ளை அவர்கள் பெற்றுக்கொண்டார்.
- தேசிய ஆராய்ச்சிமைய விஞ்ஞான சஞ்சிகைகளுக்கான சிறப்பு விருதினை விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கலாநிதி எஸ். திருக்கணேஷ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

- தேசிய ஆராய்ச்சி மைய விஞ்ஞான சஞ்சிகைகளுக்கான சிறப்பு விருதினை விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கலாநிதி பி. பிரதீபன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.
  தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சிறந்த தொகுப்பாளருக்கான விருதினை விவசாய பீடத்தினைச் சேர்ந்த கலாநிதி (திருமதி) என். ரொட்னி பெனாண்டோ அவர்கள் பெற்றுக்கொண்டார்.
- விவசாய பீட வருடாந்த கருத்தரங்கில் சிறந்த சமூக ஆராய்ச்சிக்கான விருதினை விவசாய பீடத்தைச் சேர்ந்த கலாநிதி (திருமதி) கே. டி ஹெரிஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## 2. ஊழியர் மேம்பாடு

பின்வரும் புதிய முயற்சிகளை செயற்படுத்த இலகுவாக்கும் கல்விசார், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு.

- பல்கலைக்கழக ஆண்டுக் குறிப்பேடு - 2015
- மேலாண்மைக் கையேடு - 2015
- உள்ளக மற்றும் வெளிவாரி மாணவர்களுக்கான பெறுபேறு அடிப்படையிலான அணுகுமுறை சார்ந்த பாடத்திட்ட வடிவமைப்பு, கற்பித்தல் மாணவர் மதிப்பீடு.
- திறந்த தொலைக் கற்கை முறையிலான வெளிவாரிப் பட்டக் கற்கைநெறிகள்
- ODL பருப்பொருள் சார்ச்த பாடநெறி வடிவமைப்பு மற்றும் மேம்பாடு
- தர நிர்ணயம், சுய-கணிப்பீட்டறிக்கை வரைபு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக தாபன மீளாய்வு.
- பால் சமத்துவம் ஆண், பெண் பால் அடிப்படையிலான வன்முறை தொடர்பான கிழக்குப் பல்கலைக்கழக கொள்கையும் அதன் அமுலாக்கலும்.
- பீடங்களின் மட்டத்திலான உள்ளக தர கட்டமைப்பு அலகு மற்றும் தர நிர்ணய கூடம்.

## 3. கல்வித் தர உயர்வு

- விஞ்ஞான பட்ட (சாதாரணம்) படிப்பிற்கான பாடத்திட்டத்தினை விஞ்ஞான பீடம் புதுப்பித்துள்ளதுடன் பெறுபேறு அடிப்படையிலான கல்வி மற்றும் மாணவர் மையக் கற்றல் போன்றன 2016/2017 கல்வி ஆண்டிற்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கான விஞ்ஞான பட்ட (சிறப்பு) படிப்பில் உள்ளடக்கப்படுகிறது. இவை தரம் மற்றும் மேம்படுத்தல் 21ஆம் நூற்றாண்டுக்கான உயர்கல்வி செயற்றிட்டம் (HETC) மூலம் பெறப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

- விஞ்ஞான பீடம் தனது கற்றல் கற்பித்தல் வசதிகளை (பல்கலைக்கழக மாணவர் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் பல்லூடகம், இடைத்தாக்க பலகைகள், கணிப்பலகை போன்ற போதனா கருவிகள்) தரம் மற்றும் மேம்படுத்தல் நிதியுதவியுடன் மேம்படுத்தியுள்ளது. மேலும் பல்கலைக்கழக மாணவர் ஆய்வுகூட கற்பித்தல் மற்றும் மாணவர்குழு செயற்றிட்டங்களுக்கு உதவு முகமாக ஆய்வுகூட வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் 21ஆம் நூற்றாண்டுக்கான உயர்கல்வி செயற்றிட்டத்தின்கீழ் தரம் மற்றும் மேம்படுத்தல் (QIG/BBA) நிதி மூலம் பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி பெறுபேறு அடிப்படையிலான கல்வி மற்றும்

மாணவர் மைய கற்றல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக தமது பாடத்திட்டத்தினை மீளமைத்தல்.

- வணிக மற்றும் முகாமைத்துவ பீடமானது தரம் மற்றும் மேம்படுத்தல் நிதியின் மூலம் தனது கற்பித்தல் சூழலை (மாணவர் மைய கல்வி உள்ளடங்கலாக) கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் மேம்படுத்தியுள்ளது.

## 4. அதிகாரமுறை மற்றும் முகாமைத்துவம் போன்ற விடயங்களில் தரம் மேம்படுத்தல்

- சகல பல்கலைக்கழக ஊழியர்களினதும் கூடுதல் பங்களிப்புடன் பல்கலைக்கழக ஆண்டு நாற்காட்டி முதன் முறையான உருவாக்கப்பட்டது.
- சிறப்பு அதிகாரமுறை மற்றும் முகாமைத்துவம் போன்ற விடயங்களில் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஒரு பகுதியாக, இலகுபடுத்தப்பட்ட தகவல்களை வழங்கும் நோக்குடன் பல்கலைக்கழக தகவல்களை வழங்கும் நோக்குடன் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான முகாமைத்துவ வழிகாட்டி பகுதி-I மற்றும் பகுதி-II உருவாக்கப்பட்டது.
- மத்திய நிர்வாக செயற்பாடுகள் உப-பிரிவுகள் நிலையங்கள், பிரிவுகளுடன் கூடிய திணைக்களங்களாக மீள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு செயற்பாடுகள், நிகழ்வுகளை பீட மட்டங்களுக்கு பன்முகப்படுத்தல்,
    - பரீட்சை தொடர்பான விடயங்கள் மற்றும் அரை ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்,
    - பீடங்கள் அவற்றின் திணைக்களங்களுக்கான தற்காலிக வருகைதரும் கல்விசார் ஊழியர்களின் நியமனம்.
    - ஒரு வரையறைக்கு உட்பட்டதான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.
- பேரவையின் சம்மதத்துடன் பின்வரும் புதிய சபைகள், பிரிவுகள், கூடங்கள், குழுக்கள், அமைப்புக்களை நிறுவுதல்.
    - பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் பால் இன சமத்துவம் தொடர்பான மையத்தின் ஒரு பகுதியாக பால் இன சமத்துவம் அடிப்படையிலான சமத்துவக் கூடத்தை நிறுவுதல்.
    - தர கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் குழு.
    - நல்லொழுக்க சபை.
    - உபாய திட்டமிடல் மற்றும் புள்ளி விபரவியல் பிரிவு
    - ஆங்கில பிரிவு மீள் கட்டமைக்கப்பட்டு கலை மற்றும் கலாசார பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
    - தகலல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையமானது மீள் கட்டமைக்கப்பட்டு விஞ்ஞான பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
    - பல்கலைக்கழக வணிக இணைப்பப் பிரிவு.
    - மாணவர் நல்லொழுக்கத்தினை கண்கானிக்கும் முறைமை.
    - மார்ஷல் (Marshall) அமைப்பு முறைமை.
    - குறை தீர்க்கும் குழு.
    - ஊளியர் மேம்பாட்டு நிலைய மீள் கட்டமைப்பு.
    - முகாமைத்துவத்துடனான மாணவர் கூட்டம்.
- 18 ஊழியர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டன.
- கஇயக்கங்கள்/செயற்பாடுகள் பீட மட்டங்களுக்கு பன்முகப்படுத்தல்
    - பரீட்சை தொடர்பான விடயங்கள் மற்றும் அரைவருட பரீட்சைகப் பெறுபேறுகளை வெளியிடல்.

- தற்காலிக/வருகை தரு கல்விசார் ஊழியர்களின் நியமனங்கள்
- ஒரு வரையரைக்கு உட்பட்டதான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.

**இ. எதிர்காலத் திட்டம்**

- மத்திய நிர்வாகத்தின் செயற்பாடுகள் திணைக்கழங்களுடன் கூடிய உப-பிரிவுகள், நிலையங்கள் மற்றும் அலகுகள் சார்ந்ததாக மீள் ஒழுங்குபடுத்தல்
    - ✓ சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு
- பேரவையின் சம்மதத்துடன் பின்வரும் புதிய சபைகள் / பிரிவுகள்/ கூடங்கள் / குழுக்கள் / தொகுதிகளை நிறுவுதல்
    - ✓ ஆராய்ச்சி மற்றும் வெளி விவகாம் தொடர்பான பிரிவு
    - ✓ கல்விசார் விடயங்கள் மற்றும் தர நிர்ணய பிரிவு.
- பட்டக் கற்கைகள் பீடத்தினை உருவாக்கல்.
- தொழில்நுட்பம் சார்ந்த கற்கைகளுக்கான பட்டப் படிப்பை ஆரம்பித்தல் மற்றும் தொழில்நுட்ப பீடத்தை நிறுவுதல்.

## 4. வளங்கள் மற்றும் மாணவர் விபரம்:

| பீடம் | கற்கைநெறி | மொத்த மாணவர் தொகை | மொத்த கல்விசார் ஊழியர் தொகை | மொத்த கல்விசாரா ஊழியர் தொகை |
|---|---|---|---|---|
| **அ. கி.ப.கழகம்** | | | | |
| கலை கலாசாரம் | கலை இளமானி | 1423 | 97 | 17 |
| விவசாயம் | விவசாய விஞ்ஞான இளமானி | 411 | 34 | 34 |
| வர்த்தக முகாமைத்துவம் | வணிக முகாமைத்துவ இளமானி | 503 | 48 | 15 |
| | வர்த்தக இளமானி | 448 | | |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி | 314 | 152 | 35 |
| | தாதியல் இளமானி | 120 | | |
| விஞ்ஞானம் | உயிரியல் விஞ்ஞான இளமானி | 496 | 86 | 32 |
| | பௌதீகவியல் விஞ்ஞான இளமானி | 488 | | |
| **மொத்தம்** | | **4203** | **417** | **133** |
| **ஆ. திருகோணமலை வளாகம்** | | | | |
| தொடர்பாடலும், வர்த்தக முகாமைத்துவமும் | முகாமைத்துவ இளமானி | 316 | 16 | 02 |
| | தொடர்பாடல் இளமானி | 117 | 06 | 02 |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞான இளமானி | 23 | 07 | 01 |
| சித்த வைத்தியப் பிரிவு | சித்த வைத்தியமும் அறுவை சிகிச்சையும் இளமானி | 167 | 07 | 02 |
| **மொத்தம்** | | **657** | **36** | **07** |

## 5. உள்ளூர் மாணவர்களின் விபரம்:

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 2015 இல் உள் வாங்கல் | 1ம் வருட | 2ம் வருட | 3ம் வருட | 4ம் வருட | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மாணவர் எண்ணிக்கை | | | | |
| **அ. கிழக்குப் பல்கலைக்கழகம்** | | | | | | | | |
| கலை கலாசாரம் | கலை இளமானி | தமிழ் | 104 | 239 | 276 | 543 | 261 | 463 |
| விவசாயம் | விவசாய விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 80 | 110 | 83 | 65 | 73 | 39 |
| வர்த்தக முகாமைத்துவம் | வணிக முகாமைத்துவ இளமானி | ஆங்கிலம் | 89 | 102 | 104 | 105 | 103 | 60 |
| | வர்த்தக இளமானி | ஆங்கிலம் | 95 | 88 | 97 | 75 | 93 | 94 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி | ஆங்கிலம் | 64 | 67 | 58 | 75 | 50 | 32 |
| | தாதியல் இளமானி | ஆங்கிலம் | 26 | 22 | 22 | 26 | 24 | 04 |
| விஞ்ஞானம் | உயிரியல் விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 91 | 90 | 118 | 83 | 114 | 64 |
| | பௌதீகவியல் விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 110 | 81 | 96 | 68 | 133 | |
| **மொத்தம்** | | | **659** | **799** | **854** | **1040** | **851** | **756** |
| **ஆ. திருகோணமலை வளாகம்** | | | | | | | | |
| தொடர்பாடலும், வர்த்தக முகாமைத்-துவமும் | முகாமைத்துவ இளமானி | ஆங்கிலம் | 74 | 74 | 56 | 99 | 50 | 34 |
| | தொடர்பாடல் இளமானி | ஆங்கிலம் | 62 | 62 | 38 | 58 | 21 | 34 |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 06 | 06 | - | - | - | - |
| | கணனி விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 17 | 17 | - | - | - | - |
| சித்த வைத்தியப் பிரிவு | சித்த வைத்தியமும் அறுவை சிகிச்சையும் இளமானி | ஆங்கிலம் | 45 | 45 | 22 | 25 | 15 | 16 |
| **மொத்தம்** | | | **204** | **204** | **116** | **182** | **86** | **84** |

## 6. வெளிநாட்டு மாணவர்களின் விபரம்:

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 2015 இல் உள் வாங்கல் | 1ம் வருட மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| வர்த்தக முகாமைத்துவம் | | | - | 01 |
| | வர்த்தக இளமானி | ஆங்கிலம் | - | 01 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி | ஆங்கிலம் | 04 | 03 |
| **மொத்தம்** | | | **04** | **05** |

## 7. கல்விசார் ஊழியர்களின் விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| பீடம் | பாடம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ர விரிவுரையாளர்/ விரிவுரையாளர் (தகுதிகாண்) | போதனாசிரியர்/ வருகைதரு ஊழியர் |
|---|---|---|---|---|---|---|
| கலை கலாசாரம் | அராபிய மொழி, ஒப்பீட்டுச் சமயமும் மற்றும் சமூக நல்லிணக்கம், கல்வி மற்றும் சிறுவர் பராமரிப்பு, நுண் கலை, புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, இஸ்லாமியற் கற்கை, மொழியியல், சமூக விஞ்ஞானம், கிறிஸ்தவம், பொருளியல் | தமிழ்/ ஆங்கிலம் | 0 | 02 | சி.வி-25<br>வி-30 | 40 |
| விவசாயம் | விவசாய உயிரியல் விஞ்ஞானம், விவசாய இரசாயனவியல், விவசாய பொருளியல், விவசாய இயந்திரவியல், மிருக விஞ்ஞானம், பயிர் விஞ்ஞானம் | ஆங்கிலம் | 0 | 01 | சி.வி - 24<br>வி - 03 | 06 |
| வர்த்தக முகாமைத்துவம் | வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல், மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், தொழில் முயற்சி அபிவிருத்தி, கணக்கியலும் நிதியியலும், வணிகவியல் பெருளாதாரம், பொருளாதார அபிவிருத்தி | ஆங்கிலம் | 0 | 0 | சி.வி - 20<br>வி - 01 | 27 |
| விஞ்ஞானம் | தாவரவியல், இரசாயணவியல், விலங்கியல், பௌதீகவியல், கணிதவியல், கணனி விஞ்ஞானம் | ஆங்கிலம் | 0 | 01 | சி.வி - 17<br>வி - 12 | 56 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மனித உயிரியல், துணை சுகாதார விஞ்ஞானங்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி, பிணியியல் விஞ்ஞானம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு, நோய் உடற் தொழிற்பாட்டியல் | ஆங்கிலம் | 0 | 0 | சி.வி - 05<br>வி - 20 | 76 |
| **மொத்தம்** | | | **0** | **0** | **157** | **138** |

சி.வி – சிரேஷ்ட விரிவுரையாளர் வி – விரிவுரையாளர்

### ஆ. திருகோணமலை வளாகம்

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | சிரேஷ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர் (தகுதிகாண்) | போதனாசிரியர்/ வருகைதருவோர் |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் வர்த்தக முகாமைத்துவமும் | முகாமைத்துவம் | ஆங்கிலம் | சி.வி - 05, வி - 06 | 05 |
| | தொடர்பாடல் | ஆங்கிலம் | சி.வி - 03, வி - 03 | - |
| | மொழியியல் | ஆங்கிலம் | | - |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞானம் | ஆங்கிலம் | சி.வி - 03, வி - 03 | 01 |
| | பௌதீக விஞ்ஞானம் | ஆங்கிலம் | | |
| சித்த வைத்தியப் பிரிவு | - | ஆங்கிலம் | சி.வி - 02, வி - 05 | - |
| **மொத்தம்** | | | **30** | **06** |

சி.வி - சிரேஷ்ட விரிவுரையாளர் வி - விரிவுரையாளர்

## 8. கல்விசாரா ஊழியர்களின் விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| பீடம்/திணைக்களம்/பகுதி/கிளைகள்/ அலகுகள் | மிகவும் மூத்த ஊழியர்[1] | மூத்த ஊழியர்[2] | இளம் ஊழியர்[3] | சிற்றூழியர்[4] |
|---|---|---|---|---|
| உபவேந்தர் அலுவலகம்,உபவேந்தர் விடுதி | - | 1 | 1 | 1 |
| பதிவாளர் அலுவலகம் | - | - | 3 | 1 |
| செனட் | - | 1 | 1 | 1 |
| நிர்வாகப் பிரிவு | 2 | - | 19 | 1 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 1 | 1 | 2 | 1 |
| தொழில் வழிகாட்டல் பிரிவு | - | - | - | - |
| தாபனங்கள் - கல்விசாரா | 1 | - | 3 | 1 |
| தாபனங்கள் - கல்விசார் | 1 | - | 5 | 1 |
| வினியோகங்கள் பகுதி | 1 | - | 7 | 2 |
| நிதியாளர் அலுவலகம் | 2 | 2 | 0 | 1 |
| விவசாய பீடம் | 1 | 15 | 7 | 10 |
| வர்த்தக முகாமைத்துவ பீடம் | 1 | 1 | 7 | 6 |
| விஞ்ஞான பீடம் | 2 | 14 | 6 | 10 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் | 3 | 3 | 13 | 16 |
| கலை கலாசார பீடம் | 1 | 4 | 5 | 7 |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிலையம் | - | - | 2 | 1 |
| ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு | - | - | 1 | 1 |
| பரீட்சைகள் கிளை | 1 | 2 | 10 | 2 |
| வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம் | - | - | 3 | 1 |
| நூலகம் | 1 | - | 9 | 1 |
| மருத்துவ நிலையம் | 1 | - | 7 | - |
| உடற்கல்விப் பிரிவு | - | - | - | 3 |
| நலன்புரிப் பிரிவு | 1 | - | 7 | 1 |
| பராமரிப்புப் பிரிவு | 1 | - | 8 | 16 |
| விடுதிகள் | - | - | 9 | 1 |
| பாதுகாப்புப் பிரிவு | 1 | 3 | 27 | - |
| **மொத்தம்** | **23** | **47** | **162** | **87** |

1 - நிர்வாக மற்றும் செயல்நிலை
2 – மூத்த பணியாளர் நிலை
3 - எழுதுவினைஞர் மற்றும் அது சார்ந்த நிலை
4 – மேற்குறித்த நிலைகளுக்குக் கீழ்

**ஆ. திருகோணமலை வளாகம்**

| பீடம்/திணைக்களம்/பிரிவு/ கிளை/அலகு | மிகவும் மூத்த[1] | மூத்த ஊழியர்[2] | இளம் ஊழியர்[3] | சிற்றூழியர்[4] |
|---|---|---|---|---|
| முதல்வர் அலுவலகம் | - | 01 | 01 | - |
| மொழியியலுக்கும் தொடர்பாடலுக்குமான துறை | - | - | 03 | 01 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | - | - | - | 01 |
| சித்த வைத்தியப் பிரிவு | - | - | 01 | 01 |
| நிதிப் பிரிவு | 03 | 01 | 01 | 01 |
| பரீட்சைகள் பகுதி | - | - | 02 | 01 |
| முலதனம் மற்றும் திட்டமிடல் பகுதி | - | - | - | - |
| தாபனங்கள் பகுதி | - | - | 01 | - |
| நிர்வாகப் பகுதி | - | 01 | - | 09 |
| நூலகம் | - | - | 02 | 02 |
| நலன்புரிப் பகுதி | - | - | - | - |
| **மொத்தம்** | **03** | **03** | **11** | **16** |

1 - நிர்வாக மற்றும் செயல்நிலை
2 – மூத்த பணியாளர் நிலை
3 - எழுதுவினைஞர் மற்றும் அது சார்ந்த நிலை
4 – மேற்குறித்த நிலைகளுக்குக் கீழ்

## 9. ஆராச்சிகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம்:

**அ. கிழக்குப் பல்கலைக்கழகம்**

| **1. விவசாய பீடம்** | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **வெளியிடப்பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | 41 | - | 30 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | 24 | - | - |
| ஈ. புத்தகங்கள் | - | - | - |
| உ. கட்டுரைகள் | 12 | - | 07 |
| ஊ. ஏனையவை | 06 | - | 07 |
| **மொத்தம்** | **83** | **-** | **44** |
| **2. கலை கலாசார பீடம்** | | | |
| **விபரம்** | **வெளியிடப்பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | 46 | 08 | 26 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | 10 | - | 06 |
| ஈ. புத்தகங்கள் | 07 | 01 | 01 |
| உ. கட்டுரைகள் | 63 | 01 | 19 |
| ஊ. ஏனையவை | 11 | - | - |
| **மொத்தம்** | **137** | **10** | **52** |

| 3. வர்த்தக முகாமைத்துவ பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **வெளியிடப்பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | 17 | - | 18 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | 18 | - | - |
| ஈ. புத்தகங்கள் | - | - | - |
| உ. கட்டுரைகள் | 01 | - | - |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **36** | **-** | **18** |

| 4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **வெளியிடப்பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | 12 | - | 16 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | 05 | - | 02 |
| ஈ. புத்தகங்கள் | 01 | - | - |
| உ. கட்டுரைகள் | - | - | 07 |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **17** | **-** | **25** |

| 5. விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **வெளியிடப்பட்டவை** | **சந்தைப் படுத்தப்பட்டவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. ஆராச்சிகள் | 11 | - | 01 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | 14 | - | - |
| ஈ. புத்தகங்கள் | - | - | - |
| உ. கட்டுரைகள் | 07 | - | 02 |
| ஊ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **32** | **-** | **03** |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| விபரம் | வெளியிடப்பட்டவை | சந்தைப் படுத்தப்பட்டவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
|---|---|---|---|
| அ. ஆராச்சிகள் | 08 | - | 17 |
| ஆ. கண்டுபிடிப்புக்கள் | - | - | - |
| இ. பத்திரிகைகள் | 06 | - | 02 |
| ஈ. புத்தகங்கள் | - | - | - |
| உ. கட்டுரைகள் | 04 | - | - |
| ஊ. ஏனையவை | 01 | - | - |
| **மொத்தம்** | **19** | **-** | **19** |

## 10. நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள்,பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றின் விபரம்

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| 1. விவசாய பீடம் | | | |
|---|---|---|---|
| விபரம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 01 | 01 | - |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | 01 | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | - | 02 | - |
| ஊ. ஏனையவை | 41 | - | - |
| **மொத்தம்** | **43** | **03** | **-** |
| **2. கலை கலாசார பீடம்** | | | |
| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 05 | 04 | 03 |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | 02 | 02 | 02 |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | - | - | - |
| ஊ. ஏனையவை | 12 | 10 | 02 |
| **மொத்தம்** | **19** | **16** | **07** |
| **3. வர்த்தக முகாமைத்துவ பீடம்** | | | |
| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | - | - | - |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | - | - | - |
| ஊ. ஏனையவை | 12 | 05 | 12 |
| **மொத்தம்** | **12** | **05** | **12** |

| 4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **கலந்து கொண்டவை** | **நடாத்தி முடித்தவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 06 | 01 | - |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | 01 | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | 01 | - |
| உ. சான்றிதழ் கற்கை | 08 | 03 | - |
| ஊ. ஏனையவை | 07 | - | 03 |
| **மொத்தம்** | **21** | **06** | **03** |

| 5.விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **கலந்து கொண்டவை** | **நடாத்தி முடித்தவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | 03 | - | 01 |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | 06 | 01 | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | - | - | - |
| ஊ. ஏனையவை | 30 | - | 01 |
| **மொத்தம்** | **39** | **01** | **01** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| விபரம் | கலந்து கொண்டவை | நடாத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
|---|---|---|---|
| அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை | - | 01 | - |
| ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| இ. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| ஈ. டிப்ளோமா கற்கை | - | - | - |
| உ. சான்றிதழ் கற்கை | - | 01 | 02 |
| ஊ. ஏனையவை (*ஊ.மே.நி) | 23 | 02 | - |
| **மொத்தம்** | **23** | **04** | **02** |

*ஊ.மே.நி – ஊழியர் மேம்பாட்டு நிலையம்

## 11. பெற்ற விருதுகளின் விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| 1. விவசாய பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | 01 | 01 | - |
| ஆ. அகில இலங்கைவிருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | 01 | 01 | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **02** | **02** | **-** |

| 2. கலை கலாசார பீடம் | | | |
|---|---|---|---|
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| ஆ. அகில இலங்கைவிருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **-** | **-** | **-** |

| 3. வர்த்தக முகாமைத்துவ பீடம் | | | |
|---|---|---|---|
| ஒன்றுமில்லை | | | |
| **4. விஞ்ஞான பீடம்** | | | |
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| ஆ. அகில இலங்கைவிருதுகள் | 02 | 01 | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) | - | - | - |
| **மொத்தம்** | **02** | **01** | **-** |
| **5. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்** | | | |
| **விபரம்** | **விருதுகளின் எண்ணிக்கை** | **கல்விசார் ஊழியர் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
| அ. உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| ஆ. அகில இலங்கைவிருதுகள் | 01 | 01 | - |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **01** | **01** | **-** |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| விபரம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் ஊழியர் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ. உள்நாட்டு விருதுகள் | **-** | **-** | **-** |
| ஆ. அகில இலங்கைவிருதுகள் | - | - | - |
| இ. சர்வதேச விருதுகள் | 01 | 04 | **06** |
| ஈ. ஏனையவை (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) | - | - | - |
| **மொத்தம்** | **01** | **04** | **06** |

## 12. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைகள் தொடர்பான விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| பீடம் | கற்கைநெறி | மொழிமூலம் | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப் பின்படிப்பு டிப்ளோமா | முதுநிலை | எம் பில் | பி.எச்.டி |
|---|---|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞான பீடம் | கல்வி முதுநிலை விஞ்ஞானமானி | - | - | - | - | 25.04.2015 | - | - |
| **மொத்தம்** | **-** | **-** | **-** | **-** | **-** | **01** | **-** | **-** |

## 13. மீண்டெழும் செலவீன விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| விபரம் | 2014 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|
| அ. ஆளணி ஊதியம் | 461,711,392 | 610,167,848 |
| ஆ. பிரயாணம் | 1,357,775 | 1,730,283 |
| இ. விநியோகம் | 35,476,628 | 26,561,658 |
| ஈ. பராமரிப்பு | 16,788,011 | 17,324,837 |
| உ. ஒப்பந்தம் வேலை | 89,439,350 | 112,310,739 |
| ஊ. ஏனையவை | 37,420,656 | 39,522,177 |
| எ. தேய்மானம் மற்றும் செலவினம் | 77,645,785 | 135,505,587 |
| **மொத்தம்** | **719,839,597** | **943,123,129** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| விபரம் | 2014 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|
| அ. ஆளணி ஊதியம் | 68,418,072 | 94,810,320 |
| ஆ. பிரயாணம் | 301,760 | 119,539 |
| இ. விநியோகம் | 10,489,240 | 6,418,342 |
| ஈ. பராமரிப்பு | 3,226,087 | 1,893,251 |
| உ. ஒப்பந்தம் வேலை | 42,805,178 | 55,304,521 |
| ஊ. ஏனையவை | 6,175,139 | 4,246,029 |
| எ. தேய்மானம் மற்றும் செலவினம் | 28,112,673 | 37,951,009 |
| **மொத்தம்** | **159,528,149** | **200,743,011** |

## 14. மூலதனச் செலவு விபரம்:

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| விபரம் | 2014ரூபா | 2015ரூபா |
|---|---|---|
| அ. பராமரிப்பு மற்றும் புனர்நிர்மாணம் | 60,243,208 | 69,754,433 |
| ஆ. நிலையான சொத்துக்கள் கொள்வனவு | 81,564,730 | 111,936,705 |
| இ. கட்டிட நிர்மாணம் - புதியவை | 69,572,543 | 74,794,900 |
| ஈ. கட்டிட நிர்மாணம் - தற்போதுள்ளவை | 278,728,815 | 174,875,758 |
| ஈ. ஏனையவை | 14,223,357 | 54,634,554 |
| **மொத்தம்** | **504,332,653** | **485,996,350** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| விபரம் | 2014ரூபா | 2015ரூபா |
|---|---|---|
| அ. பராமரிப்பு மற்றும் புனர்நிர்மாணம் | 45,852,953 | 24,165,120 |
| ஆ. நிலையான சொத்துக்கள் கொள்வனவு | 14,795,022 | 23,366,000 |
| இ. கட்டிட நிர்மாணம் - தற்போதுள்ளவை | 154,441,848 | 291,972,441 |
| ஈ. ஏனையவை | - | 84,380 |
| **மொத்தம்** | **215,089,823** | **339,587,941** |

## 15. செயற் திட்டங்களின் விபரம் (உள்ளூர், வெளிநாட்டு நிதி)

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| பெயர் விபரம் | கடன் / கொடை | நிதி வழங்குனர் # | TCE ரூபா | RFA ரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|---|
| விஞ்ஞான பீட விலங்கியல் துறை கட்டிடத்தொகுதியின் நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 199.00 | - | - |
| கலை கலாசாரபீட கட்டிடத்தொகுதி நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 121.00 | - | - |
| நூலகக் கட்டிடத்தொகுதி நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 171.00 | - | - |
| வாத்தக முகாமைத்துவ பீடத்தொகுதி நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 230.00 | - | - |
| கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட 250 மாணவர்களுக்கான சுற்றுமதில் மற்றும் நுளைவாயிலுடன் கூடிய விடுதித் தொகுதிக் நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 360.00 | - | - |
| மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட பேராசிரியர் அலகு நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 299.00 | - | - |
| கலை கலாசாரபீட விரிவுரை மண்டபத்துடன் கூடிய கேட்போர் கூட நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 44.60 | - | - |
| **மொத்தம்** | | | **1424.60** | **-** | **-** |

# (இலங்கை அரசாங்கம் / ஆசிய அபிவிருத்தி வயங்கி / IDA / உலக வங்கி / ……….)

**TCE-**மொத்தச் செலவு மதிப்பீடு, **RFA-**திரும்பப்பெற்ற அன்னிய உதவிகள், **DF-**உள்நாட்டு நிதி

### ஆ. திருகோணமலை வளாகம்

| பெயர் விபரம் | கடன் / கொடை | நிதி வழங்குனர் # | TCE ரூபா | RFA ரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை வளாக 100 ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கான விடுதித்திட்ட நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 200.00 | - | - |
| திருகோணமலை வளாக ஆய்வுகூட கட்டிட நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 14.00 | - | - |
| திருகோணமலை வளாக மாணவர் பொழுது போக்கு மைய நிர்மானம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 45.50 | - | - |
| விளையாட்டு மைதான நிர்மாணம் | கொடை | இலங்கை அரசாங்கம் | 50.00 | - | - |
| தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கான கட்டிடத்தொகுதி | கொடை | இலங்கை அரசாங்கம் | 304.40 | - | - |
| பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி | கொடை | இலங்கை அரசாங்கம் | 410.00 | - | - |
| நூலகத்திற்கான கட்டிடத்தொகுதி | கொடை | இலங்கை அரசாங்கம் | 326.20 | - | - |
| பொழுது போக்கு மையத்துடன் கூடிய சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தொகுதி | கொடை | இலங்கை அரசாங்கம் | 130.40 | - | - |
| **மொத்தம்** | - | - | **1480.50** | - | - |

# (இலங்கை அரசாங்கம் / ஆசிய அபிவிருத்தி வயங்கி / IDA / உலக வங்கி / ……….)

## 16. செயற் திட்டங்களின் செலவு விபரம் (உள்ளூர்/வெளியூர் நிதி)

### அ. கி.ப.கழகம்

| பெயர் | TCE Rs. (மில்.) | 2014இல் செலவு (ரூபா மில்.) | 2015இல் செலவு (ரூபா மில்.) | 31.12.2015 இல் திரண்ட செலவு (மில்.) | பௌதீக முன்னேற்றம் % தில் |
|---|---|---|---|---|---|
| **நிரந்தரக் கட்டடங்கள்** | | | | | |
| அ. விஞ்ஞானபீட விலங்கியல் திணைக்களக் கட்டிடத்தொகுதி நிர்மானம் | 199.00 | 172.14 | - | 172.14 | 99% |
| ஆ. கலை கலாசாரபீட கட்டிடத்தொகுதி நிர்மானம் | 121.00 | 100.73 | - | 100.73 | 99% |
| இ. நூலக கட்டிடத்தொகுதி நிர்மானம் | 171.00 | 140.12 | - | 140.12 | 99% |
| ஈ. வர்த்தக முகாமைத்துவ பீட கட்டிடத்தொகுதி நிர்மானம் | 230.00 | 195.11 | - | 195.00 | 99% |
| உ. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட 250 மாணவர்களுக்கான சுற்று மதில் மற்றும் நுளைவாயில் கதவுடன் கூடிய ஆண்கள் விடுதித் தொகுதி நிர்மானம் | 360.00 | 83.11 | 94.90 | 178.01 | 88% |
| ஊ. மட்டக்களப்பு போதனா வைத்தியவாலையில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட | 299.00 | 44.00 | 57.60 | 101.61 | 92% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பேராசிரியர் அலகுத் தொகுதி நிர்மானம் | | | | | |
| எ. கலை கலாசார பீட விரிவுரை மண்டபத்துடன் கூடிய கலையரங்கு நிர்மானம் | 44.60 | 16.35 | 8.50 | 24.85 | 99% |
| **மொத்தம்** | **1424.6** | **751.56** | **161.00** | **912.57** | **-** |

## ஆ. திருகோணமலை வளாகம்

| பெயர் | TCE Rs. | 2014இல் செலவு (ரூபா) | 2015இல் செலவு (ரூபா) | 31.12.2015 இல் திரண்ட செலவு | பௌதீக முன்னேற்றம் % தில் |
|---|---|---|---|---|---|
| 200 ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கான விடுதித்திட்ட நிர்மானம் | 200.00 | 107.55 | 17.32 | 160.84 | 100% |
| விஞ்ஞான ஆய்வுகூட கட்டிட நிர்மானம் | 14.00 | 5.90 | - | 11.68 | 100% |
| மாணவர்களுக்கான புத்துயிராக்க மைய நிர்மானம் | 45.50 | 17.59 | 6.92 | 31.39 | 100% |
| விளையாட்டு மைதான நிர்மானம் | 50.00 | 23.52 | 5.98 | 29.50 | 75% |
| தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கான கட்டிடத்தொகுதி | 304.40 | - | 140.67 | 140.67 | 68% |
| பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி | 410.00 | - | 35.09 | 35.09 | 21% |
| நூலகத்திற்கான கட்டிடத்தொகுதி | 326.20 | - | 74.89 | 74.89 | 53% |
| பொழுது போக்கு மையத்துடன் கூடிய சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தொகுதி | 130.40 | - | 11.10 | 11.10 | 32% |
| **Total** | **1480.50** | **154.58** | **291.97** | **495.20** | **-** |

## 17. நிதி நிலைமை விபரம் (செலவு)

### அ. கி.ப.கழகம்

| விபரம் | 2015 இல் ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) | 2015இல் செலவுகள் (ரூபா) | சேமிப்பு/ மிகுதி (ரூபா) |
|---|---|---|---|
| அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்களை | 807,000,000 | 807,617,542 | (617,542) |
| ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள் | 495,000,000 | 485,996,350 | 9,003,650 |
| இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி | - | - | - |
| ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | - |
| **மொத்தம்** | **1,302,000,000** | **1,293,613,892** | **8,386,108** |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| விபரம் | 2015 இல் ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) | 2015 இல் செலவுகள் (ரூபா) | சேமிப்பு/ மிகுதி (ரூபா) |
|---|---|---|---|
| அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள | 162,250,000 | 162,792,002 | (542,002) |
| ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள் | 245,000,000 | 339,587,941 | (94,587,941) |
| இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி | - | - | - |
| ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | - |
| **மொத்தம்** | **407,250,000** | **502,379,943** | **(95,129,943)** |

## 18. நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| வருமான மூலங்கள் | 2015இல் ஒதுக்கம் (ரூபா) | 2015இல் திரட்டப்பட்டது (ரூபா) | பற்றாக்குறை/ மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|
| பட்டப்படிப்புக் கற்கை<br>பட்டப்பின்படிப்புக் கற்கை | 17,130,000 | 14,045,700 | ( 3,084,300) |
| ஆலோசனைகள் | - | - | - |
| ஏனையவை | 1,630,600 | 1,705,800 | 75,200 |
| **மொத்தம்** | **18,760,600** | **15,751,500** | **(3,009,100)** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| வருமான மூலங்கள் | 2015இல் ஒதுக்கம் (ரூபா) | 2015இல் திரட்டப்பட்டது (ரூபா) | பற்றாக்குறை/ மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|
| பட்டப் படிப்புக் கற்கை | 1,850,000 | 1,555,355 | (294,645) |
| பட்டப்பின்படிப்புக் கற்கை | - | - | - |
| ஆலோசனைகள் | - | - | - |
| ஏனையவை | 425,000 | 1,223,518 | 798,518 |
| **மொத்தம்** | **2,275,000** | **2,778,873** | **503,873** |

## 19. நிதி செயற்றிறன் ஆய்வு - 2015

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| தலைப்பு | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூபா) |
|---|---|---|
| மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 192,153 |
| மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ) | மு.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 115,631 |
| **மொத்தம்** | | **307,784** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| தலைப்பு | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூபா) |
|---|---|---|
| மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 261,303 |
| மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ) | மு.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 545,085 |
| **மொத்தம்** | | **806,388** |

## 20. 2015ஆம் ஆண்டில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம்

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| உட்கட்டமைப்பு வசதிகள் | செவீனம் (மில்லியன் ரூபாவில்) | பொதீக முன்னேற்றம் |
|---|---|---|
| சௌக்கிய பராமரிப்பு பீடம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக கழிப்பறைகள் புனரமைப்பு | 1.9 | 100% |
| கிழக்குப் பல்கலைக்கழக விவசாயபீட புனரமைப்பு பணிகள் | 3.2 | 100% |
| கிழக்குப் பல்கலைக்கழக A1, A2 குடியிருப்பு புனரமைப்பு | 12.3 | 100% |
| கிழக்குப் பல்கலைக்கழக தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப மைய ஆய்வுகூட புனரமைப்பு | 1.1 | 100% |
| கிழக்குப் பல்கலைக்கழக செனட் கட்டிட, வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கற் கற்கைகள் நிலையம், உள்ளக தர உத்தரவாத நிலைய கட்டிடம், மற்றும் வர்த்தக விரிவுரை மண்டம் என்பவற்றுக்கான யன்னல் திரைச்சீலை பொருத்துதலும் வழங்கலும் | 3.2 | 100% |
| **மொத்தம்** | **21.7** | - |

**ஆ. திருகோணமலை வளாகம்**

| உட்கட்டமைப்பு வசதிகள் | செவீனம் (மில்லியன் ரூபாவில்) | பொதீக முன்னேற்றம் |
|---|---|---|
| கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி | 3,089,704 | 100% |
| பகுதியாக்கும் வேலை | 416,772 | 100% |
| புதிய நீர்வினியோக இணைப்பு | 2,028,696 | 100% |
| புதிய மின்சாரசபை மின்னிணைப்பு | 3,640,025 | 100% |
| **மொத்தம்** | **9,175,197** | |

## 21. ஏதேனும் பிற விடயங்கள்/இவ்வறிக்கை தொடர்பான செயற் திறன்

### அ. 2015இல் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்கள்

| தொடர் இல. | கூட்ட இலக்கம் | திகதி |
|---|---|---|
| 01 | 40 ஆவது கணக்காய்வுக் குழு | 29.08.2015 |
| 02 | 41 ஆவது கணக்காய்வுக் குழு | 03.10.2015 |
| 03 | 42 ஆவது கணக்காய்வுக் குழு | 28.11.2015 |
| 04 | 43 ஆவது கணக்காய்வுக் குழு | 22.12.2015 |

**22. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No.: ஈஎன்பி/பீரீ/சீ/ஈயூஎஸ்எல்/01/15/01
මගේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016 ஆகஸ்ட் 31

உப வேந்தர்,
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம்

07 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்படுகின்ற போதும் கூட அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 916,154,072 தொகையான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியானது காணியின் பெறுமதியை தனியாக காட்டாமல் ஒன்றாக சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

ரூபா 19,411,037 மொத்தப் பெறுமதியுடைய தளபாடங்கள், உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக 1990 ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்த போதிலும் இது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குகளில் எந்தவித சீராக்கங்களும் செய்யப்பட்டிருக்காததால் அத்தகைய நிலையான சொத்துக்களின் பெறுமதி அதே பெறுமதியால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 9,716,548 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற, பதவிகள் வறிதாக்கப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 307 அலுவலர்களிடமிருந்து அறவிடப்படாமல் 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ளன. இருந்த போதிலும், இந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது குறித்த அலுவலர்களுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ 2016 மே 31 வரையிலும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வழங்குநர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,378 கூட்டுத்தொகையான முற்பணங்கள், அந்த முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 11 ஆண்டுகளிற்கு மேலாக 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) பல்வேறு வழங்குநர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 18,698,666 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 05 ஆண்டுகள் தொடக்கம் 19 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் அறவிடப்படாதிருந்தன.

### 2.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | |
| (i) X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பதவியணியினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் பொதுப் படிவம்: 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழக முறைமையில் இந்த நடைமுறை இருக்கவில்லையென உப வேந்தர் எனக்கு அறிவித்திருந்தார். |
| (ii) XXVII ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளிச்செல்கைகளைப் பதிவு செய்வதற்காக வருகைப் பதிவேடொன்றினை பேணுவதற்கு பல்கலைக்கழகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் கல்விசார் பதவியணியினர் பாரம்பரியமாகவே அவர்களுடைய வருகைகளைப் பதிவு செய்வதில்லையென உப வேந்தர் எனக்கு அறிவித்திருந்தார். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 396 | பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ரூபா 24,502 மொத்தப் பெறுமதியுடைய பத்துக் காசோலைகள் 01 வருடத்திற்கு மேலாக கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ரூபா 4,579,874 தொகையான சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தப் பெறுமதியானது நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் நடைமுறைப் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 76,652,728 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 157,502,871 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 80,850,143 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்கள் மற்றும் ஒப்பந்த சேவைகள் மீதான செலவினம் முறையே ரூபா 174,848,703 மற்றும் ரூபா 35,370,733 தொகைகளால் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### (அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழக பரீட்சைகளின் பெறுபேறுகள் பரீட்சைகள் நடாத்தப்பட்டதன் பின்னர் 03 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2015 ஏப்ரல், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது நடைபெற்ற வெளிவாரிப் பட்டக் கற்கைநெறிகள் தொடர்பான பரீட்சை வெளியீடுகள் கருத்தில்கொள்ளத்தக்க காலதாமதத்தின் பின்னர் 2016 யூன் 08 இலேயே வெளியிடப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பீடம் / பிரிவு | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சை நடைபெற்ற மாதம் | 2016 மே 31 வரையான காலதாமதம் |
|---|---|---|---|
| | | | மாதங்கள் |
| **வணிக முகாமைத்துவ பீடம்** | | | |
| - 1 ஆம் ஆண்டு – 2010/2011 | 160 | 2015 ஆகஸ்ட் | 08 |
| - 2 ஆம் ஆண்டு 2010/2011 (மீண்டும்) | 51 | | |

6

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

**விவசாய பீடம்**

| | | | |
|---|---|---|---|
| - 1 ஆம் மற்றும் 2 ஆம் ஆண்டு (மீண்டும்) | 04 | 2015 யூலை | 09 |

**தாதியர் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| - 1 ஆம் ஆண்டு, 1 ஆம் அரையாண்டு 2010/2011 (மீண்டும்) | 04 | 2015 ஏப்ரல் | 09 |

**(ஆ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்**

மீளாய்வாண்டின் போதும் கடந்த மூன்று ஆண்டுகளிலும் ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| **பீடம்** | **சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|---|
| | **2015** | **2014** | **2013** | **2012** |
| விவசாயம் | 39 | 118 | 83 | 65 |
| கலை மற்றும் கலாச்சாரம் | 463 | 210 | 276 | 543 |
| வணிக மற்றும் முகாமைத்துவம் | 154 | 208 | 201 | 180 |
| விஞ்ஞானம் | 64 | 192 | 214 | 151 |
| சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞானங்கள் | 36 | 89 | 80 | 101 |
| **மொத்தம்** | **756** | **817** | **854** | **1,040** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது விவசாய பீடத்திற்கும் விஞ்ஞான பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 67 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த அதேநேரம்

7

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 120 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது அனைத்துப் பீடங்களிற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**(இ) மாணவரொருவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கைகள் மற்றும் மாணவரொருவருக்கான கிரயம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா '000) | 958,198 | 586,471 | 627,796 | 427,087 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 4,203 | 3,810 | 3,158 | 2,769 |
| மாணவரொருவருக்கான கிரயம் (ரூபா '000) | 228 | 154 | 199 | 154 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் 48 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நூலக நிர்வாகம்**

07 கல்விசார் பதவியணியினரால் எடுத்துச்செல்லப்பட்ட இருபத்தேழு நூலகப் புத்தகங்கள் நிர்ணயித்த காலப்பகுதியினுள் அவற்றை மீள ஒப்படைக்காமல் 01 முதல் 05 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் வைத்திருக்கப்பட்டிருந்த போதிலும் அப் புத்தகங்களை மீளப்பெறுவதற்கோ அல்லது

காலதாமதங்களிற்காக ரூபா 43,183 தண்டப்பணத்தினை விதிப்பதற்கோ பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஆராய்ச்சி முற்பணங்களின் தீர்ப்பனவு**

ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கு 2014 ஆம் ஆண்டில் 02 விரிவுரையாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 82,850 தொகையான ஆராய்ச்சி மானிய முற்பணங்கள் 2016 யூன் 30 வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்காத போதிலும் பல்கலைக்கழகம் இது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**(இ) கற்றல்களுக்காக விடுமுறை வழங்கல்**

கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கு இணைப்புச்செய்யப்பட்டிருந்த தரம் - I சிரேஷ்ட விரிவுரையாளரொருவரிற்கு மேற்குறிப்பிடப்பட்ட பீடத்தில் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடருவதற்கு 2010 ஒக்தோபர் 01 தொடக்கம் 2011 மார்ச் 31 வரை கொடுப்பனவுடனான கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஒக்தோபர் 01 இல் பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திடப்பட்ட பிணைமுறி உடன்படிக்கையின் பிரகாரம், விரிவுரையாளர் அவரின் கற்கை விடுமுறை முடிவடைந்த பின்னர் 05 ஆண்டுகள் பல்கலைக்கழகத்திற்கு கட்டாயமாக சேவைசெய்ய வேண்டிய போதிலும் 2014 பெப்ரவரி 11 இலிருந்து அமுலுக்குவந்த அவரின் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் 2015 சனவரி 29 ஆம் திகதி அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். இது தொடர்பில் பிணைதாரரிடமிருந்து ரூபா 2,534,659 பிணைமுறிப் பெறுமதியை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) விடுமுறைகள் மற்றும் விருதுகள் குழு அவரின் ஓய்வுபெறும் திகதி வரை பல்கலைக்கழக சேவைக்கான மிகுதிக் காலப்பகுதியை கருத்திற்கொள்ளாமல் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தொடருவதற்கு விரிவுரையாளரிற்கு முழுக் கொடுப்பனவுடனான கற்கை விடுமுறையினை அங்கீகரித்திருந்தது.

(iii) 2011 ஏப்ரல் 20 ஆம் திகதிய 01/2011 ஆம் இலக்க உயர் கல்விச் சுற்றறிக்கை மற்றும் 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், கல்விசார் பதவியணியினர் ஆராய்ச்சிப் படிகளைப் பெறுவதற்கு ஆராய்ச்சிக் குழுவின் அங்கீகாரத்துடன் ஆராய்ச்சி முன்மொழிவினை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக புதிய முன்மொழிவொன்றினை சமர்ப்பிக்காமல் அவரது கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கைக்காக 2011 இலிருந்து 2015 வரையான ஐந்து ஆண்டுகள் காலப்பகுதியின் போது ரூபா 923,708 கூட்டுத்தொகையான ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றிருந்தார்.

**(ஈ) பிணைமுறியினை மீறுதல்**

சமூக விஞ்ஞானப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் இந்தியா சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை கற்பதற்கு 2012 மார்ச் 05 இல் உயர் கல்விக்கான தேசிய நிலையத்திடமிருந்து (என்சீஏஎஸ்) ரூபா 368,500 மானியத்தை பெற்றிருந்த போதிலும் 2016 யூன் 30 வரையிலும் அவர் கலாநிதி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. எனினும், உடன்படிக்கைக்கான ரூபா 368,500 பிணைமுறிப் பெறுமதியை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் 24 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் பிரகாரம், 155 கணனிகள் மற்றும் 06 யூபிஎஸ் இன் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்ட ரூபா 4,233,370 நட்டத்தை அதற்குப் பொறுப்பான பல்கலைக்கழகத்தின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட நட்டம் 2016 மே 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புலமைப்பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்ற பல்கலைக்கழகத்தின் எழுபத்தி மூன்று விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் முடிவடைந்த பின்னர் கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 05

தொடக்கம் 20 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் அந்த மீதிகள் நிலுவையாக இருந்த போதிலும் உடன்படிக்கையினை முறித்துக்கொண்டமைக்காக அந்த விரிவுரையாளர்களிடமிருந்தோ அல்லது அவர்களின் பிணைதாரர்களிடமிருந்தோ ரூபா 156,535,552 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு 2016 யூன் 30 வரை பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் முறித்துக் கொண்டவர்களிடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்குமாக 12 வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தன என உப வேந்தர் எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) 2014 ஆம் ஆண்டிற்கான திருகோணமலை பல்கலைக்கழகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழக விருந்தினர் இல்லம், டொக்யாட் வீதி விடுதி, சிற்றுண்டிச்சாலை மற்றும் பராமரிப்பு அலகு என்பவற்றில் வைக்கப்பட்டிருந்த ரூபா 1.19 மில்லியன் பெறுமதியான 167 இருப்பு உருப்படிகள் காணாமல் போயுள்ளதென அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் இழப்புக்களின் காரணங்களை கண்டறிவதற்கும் அத்தகைய இழப்புக்களிற்கான பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்த நிர்வாகம்

**திருகோணமலை பல்கலைக்கழகத்தில் விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல்**

2014 ஏப்ரல் 19 ஆம் திகதி விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரரொருவருக்கு ரூபா 32,447,463 கிரயத்தில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 24,765,167 கூட்டுமொத்தமான கொடுப்பவுகளை பெற்ற பின்னர் ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளை கைவிட்டிருந்தார். எவ்வாறாயினும், செல்லுபடியான காலத்தினுள் செயலாற்றல் பிணைமுறியினை காசாக்குவதற்கும் ஒப்பந்தகாரரை கறுப்புப் பட்டியலிலிடுவதற்கும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

19 பேராசிரியர்களின் பதவிகள் மற்றும் 65 சிரேஷ்ட விரிவுரையார்கள் மற்றும் விரிவுரையாளர்களின் பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் நிலவியிருந்ததுடன் இந்த நிலைமை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மோசமானதாக

பாதித்திருந்த போதிலும் 2016 யூலை 31 வரையிலும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழகம் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2.875 மில்லியன் கிரயத்தில் "மென்படல செயலிகளின் எட்டு துணைப்பாகங்கள்" என அழைக்கப்படும் மருத்துவ உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மென்படல செயலிகளின் பிரதான பாகத்தை கொள்வனவு செய்வதற்குத் தவறியமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து இந்த உபகரணம் சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் விளைவற்றிருந்தது.

(ஆ) 2012 யூலை 04 இல் பல்கலைக்கழகத்தால் ரூபா 2,994,370 பெறுமதியான "பிணம் குளிரூட்டும் அறை" என அழைக்கப்படும் மருத்துவ உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டு மனித உயிரியல் திணைக்களத்தின் உடற்கூறியல் ஆய்வுகூடத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகம் மேற்குறிப்பிடப்பட்ட உபகரணத்தை செயற்படுத்துவதற்கு 10 கிலோவாற்ஸ் யூபிஎஸ் ஐ வழங்கியிருக்கவில்லை. அதன் விளைவால், 2016 ஏப்ரல் 07 வரை அது விளைவற்றிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிசடி/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியிலேயே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிசடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த

திட்டத்தில் முன்னைய மூன்று வருடங்களிற்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அடையப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதிகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்காததால் கூட்டிணைந்த திட்டம் வருடாந்த செயன்முன்னேற்றத்தை மதிப்பிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அமைப்புக் கட்டமைப்பு, தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பௌதீகரீதியான செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான செயலாற்றல் அறிக்கைகளை பல்கலைக்கழகம் தயாரித்திருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகம் மீளாய்வாண்டிற்கான அதன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கலை மற்றும் கலாச்சார பீடத்தினை இணைத்திருக்கவில்லை.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1.(அ) மற்றும் 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதியினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒரு ஆண்டு காலப்பகுதிக்காக பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5.5 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2015 யூன் மாதத்தில் வழங்கப்பட்ட 24 கணக்காய்வு ஐயவினாக்களில் 2016 யூன் 30 வரையிலும் 03 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் வெளிப்படுத்தல் |
| (ஆ) ஒப்பந்த நிர்வாகம் | தாமதக் கட்டணங்களின் அறவீடு, கால நீடிப்பிற்கான அனுமதி, ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுடனான இணக்கப்பாடு |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

14

**23. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2015திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2)ஆம் பிரிவு மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு**

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்** | | |
| **2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம்** | | |
| | 07ஆம் இலக்க இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்படுகின்ற போதும் கூட அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் 2015, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 916,154,072 தொகையான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தனியாக காட்டாமல் ஒன்றாக சேர்த்துக் காட்டியிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான காணி கட்டிடங்களுக்கான உரிமம் பெறுதல் மற்றும் மறுமதிப்பீட்டுச் செயற்பாடுகள் ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் செயற்பாட்டில் உள்ளது. இச் செயற்பாடானது முடிவடைந்ததும் மறுமதிப்பீட்டின் பெறுமதியானது 2016ஆம் ஆண்டின் நிதியறிக்கைகளில் 07ஆம் இலக்க இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தனித்தனியாக கணக்கீடு செய்யப்படும். |
| **2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு** | | |
| | ரூபா 19,411,037 மொத்தப் பெறுமதியுடைய தளபாடங்கள், உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக 1990ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்த போதிலும் இது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குகளில் எந்தவித சீராக்கங்களும் செய்யப்பட்டிருக்காததால் அத்தகைய நிலையான சொத்துக்களின் பெறுமதி இதே பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br><br>இழப்பின் மதிப்பானது ரூபா 19,411,037.00 ஆகும். இதற்கான ஒப்புதல் திறைசேரியின் செயலாளரிடமிருந்து தற்போது வரை கிடைக்கப்பெறவில்லை, ஆகையால் கணக்குப் பதிவேட்டில் எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை. நிதிப் பிரிவு 102 இன் படி திறைசேரி செயலாளரிடமிருந்து ரூபா 19,411,037.00 இழப்பை பதிவழிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி கிடைத்ததும் கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் செய்யப்படும். |
| **2.2.3 பெறவேண்டிய கணக்குகள்** | | |
| (அ) | ரூபா 9,716,548 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற, பதவிகள் வறிதாக்கப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 307 அலுவலர்களிடமிருந்து அறவிடாமல் 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ளன. இருந்தபோதிலும், இந்த நிலுவைகள் கடன் மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது குறித்த அலுவலர்களுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ 2016 மே 31 வரையிலும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>நிலுவைக் கடன் மிகுதியை மீளப் பெறுவதற்கு பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படும்/படவுள்ளது:<br><br>• **சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டோர் தொடர்பில்:**<br>மேற் கூறப்பட்ட அலுவலர்கள் தங்களது பல்கலைக்கழக சேமலாப நிதியை தற்போது வரை கோரவில்லை. பல்கலைக்கழக சேமலாப நிதிக்காக விண்ணப்பிக்கும் போது நிலுவைத் தொகையிலிருந்து செலுத்தப்படாத கடன்கள் மற்றும் சம்பள முற்பணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | | • **கி.ப.கழகத்திலிருந்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில்:**<br>ரூபா 1,394,928.00 பெறுமதியான செலுத்தப்படாத மற்றும் சம்பள முற்பணங்களை சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு மாற்றுவதற்கு குறிப்புப் பத்திரத்திரமொன்று நிதிக்குழு முன் வைக்கப்பட்டுள்ளது. பேரவையின் ஒப்புதலுடன் கி.ப.கழக இறுதிக் கணக்கில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு நீக்கப்படும்.<br><br>• **பதவி விடுமுறை வழங்கப்பட்டோர் மற்றும் ஒப்பந்தத்தை மீறியோர் தொடர்பில்:**<br>சட்டமா அதிபருடன் ஆலோசித்து குறிக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மிகுதித் தெகையை அவர்களது ஒப்பந்தத் தொகையை மீளச்செலுத்தும் போது அறவிட சட்ட நடவடிக்கை<br><br>• **ஓய்வுபெற்ற ஊழியர்கள் தொடர்பில்:**<br>கடிதங்களை அனுப்புவதன் மூலம் ஓய்வு பெற்ற ஊழியர்களிடமிருந்து கடன் மற்றும் சம்பள முற்பணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் "கொடுப்பனவுகள் இல்லை" என்ற சான்றிதழ் வழங்குவதற்குப் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து இத்தொகையை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>• **ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு / அரசாங்க அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர் தொடர்பில்:**<br>மாற்றலாகிச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஆலோசிக்கப்பட்டு கடன் மற்றும் சம்பள முற்பணங்களை அறவிடுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வெளிநாட்டு வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,378 கூட்டுத்தொகையான முற்பணங்கள், அந்த முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 11 ஆண்டுகளிற்கு மேலாக 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>அனேகமான விற்பனையாளர்களுக்கு முற்பணங்கள் 1990ஆம் ஆண்டிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால், மேற்படி பொருட்களுக்கான கொடுப்பனவுகளை கொழும்பைத் தளமாகக்கொண்ட வழங்குனர்களுக்கு அவ்விடத்திலேயே வழங்கப்படவேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்வேறு வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 18,698,666 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 05 ஆண்டுகள் தொடக்கம் 19 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் அறவிடப்படாதிருந்தன. | | இதனால் மேற்படி கொள்வனவுக்கான கொடுப்பனவுகள் முற்பண முறைப்படி சீர்செய்யப்படும் பொருட்டு முற்பண அடிப்படையில் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டது. ஆயினும் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னும் இவ் முற்பணக் கொடுப்பனவுகள் சீர்செய்யப்படவில்லை.<br><br>இது சீராக்கப்படும். |
| **2.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை** | | | |
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | | | **இணங்காமை** |
| **(அ)** | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை** | | |
| (i) | X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பதவியணியினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் பொதுப் படிவம்: 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழக முறைமையில் இந்த நடைமுறை இருக்கவில்லையென உபவேந்தர் எனக்கு அறிவித்திருந்தார். | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>பல்கலைக்கழக முறையில் இது நடைமுறையில் இல்லை |
| (ii) | ஆம் அத்தியாயத்தின் 3:1ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளிச்செல்கைகளைப் பதிவு செய்வதற்காக வருகைப் பதிவேடொன்றினை பேணுவதற்கு பல்கலைக்கழகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் கல்விசார் பதவியணியினர் பாரம்பரியமாகவே அவர்களுடைய வருகைகளைப் பதிவு செய்வதில்லையென உபவேந்தர் எனக்கு அறிவித்திருந்தார். | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>வழமையாக பல்கலைக்கழகங்களில் கல்விசார் பதவியணியினர் தங்கள் வரவுகளை பதிவதில்லை |
| **(ஆ)** | **நிதிப் பிரமாணங்கள்** | | |
| (i) | நி.பி. 396 | பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ரூபா 24,502 மொத்தப் பெறுமதியுடைய பத்துக் காசோலைகள் 01 வருடத்திற்கு மோலாக கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ரூபா 4,579,874 தொகையான சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தப் | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட மாற்றப்படாத காசோலைகளின் மொத்த தொகையான ரூபா 24,502.00 (குறிக்கப்பட்ட ரூபா 27,667.00 இல்லை) ஆனவை ரத்துச் செய்ய ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஏடுகளில் சீர் செய்யப்பட்டு பொறுப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதியானது நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் நடைமுறைப் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தது. | வைக்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3. நிதிசார் மீளாய்வு**
**3.1 நிதிசார் விளைவுகள்**

| | |
|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 76,652,728 பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 80,850,143 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்கள் மற்றும் ஒப்பந்த சேவைகள் மீதான செலவினம் முறையே ரூபா 174,848,703 மற்றும் ரூபா 35,370,733 தொகைகளால் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தன. | இந்த முடிவிற்கான காரணம், வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் செலவீனங்களுக்கான செலவீனங்களை விட பின்வரும் அதிகளவான செலவுகள் இடம்பெற்றமையாகும்:<br><br>1. பல்கலைக்கழகத்தின் தனிப்பட்ட ஊதியங்கள் ரூபா 704,978,168 வினால் 32.98% அதிகரித்துள்ளது. தனிப்பட்ட ஊதியங்கள் அதிகரிப்பிற்கான முக்கிய காரணங்களாவன:<br>• பல்கலைக்கழக ஊழியர்களுக்கான மாதாந்த இடைக்கால கொடுப்பனவு ரூபா. 10,000 வரை உயர்ந்தமை.<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சகல கல்விசாரா ஊழியர்களுக்கும் 20% மாதாந்த இடர்க்கொடுப்பனவு 2015ஆம் ஆண்டு தை மாதம் 1ஆந் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. (ப.மா. சுற்றறிக்கை இல: 02/2015)<br>• 2015ஆம் ஆண்டு தை மாதம் 1ஆந் திகதியிலிருந்து கல்விசார் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டன. (ப.மா. சுற்றறிக்கை இல: 1000)<br><br>2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2015ஆம் ஆண்டு தை மாதம் 1ஆந் திகதியிலிருந்து போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. (ப.மா. சுற்றறிக்கை இல: 13/2015)<br><br>3. ஒப்பந்தசேவைகள் மீதான செலவுகள் ரூபா 167,615,260 ஆல் 26.75வீதமாக அதிகரித்தமை.<br><br>4. பணமல்லாத தேய்மானம் மற்றும் கடனீட்டுச் செலவுகள் ரூபா 173,456,597 ஆக அதிகரித்தமை. இதன் காரணமாக பல்கலைக்கழகத்தின் மொத்த இயக்கச் செலவுகள் அதிகரித்துள்ளது. |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

| | | |
|---|---|---|
| **(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்** | | |
| | 1995 யூலை 14ஆம் திகதிய 636ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழக பரீட்சைகளின் பெறுபேறுகள் பரீட்சைகள் நடாத்தப்பட்டதன் பின்னர் 03 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2015 ஏப்ரல், யூலை, மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது நடைபெற்ற வெளிவாரிப் பட்டக் கற்கை நெறிகள் தொடர்பான பரீட்சை வெளியீடுகள் கருத்திற் கொள்ளத்தக்க காலதாமதத்தின் பின்னர் 2016 யூன் 08 இலேயே வெளியிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>பரீட்சை முடிவுகள் தாமதமானமைக்கான காரணம் இரட்டிப்புத் தொகுதி மாணவர்களின் உள்ளீர்ப்பு மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமான அதிகளவான வேலைப்பழுவாகும். எனினும் தற்போது அனைத்து பாடங்களுக்குமான பரீட்சை முடிவுகளும் வெளியிடப்பட்டுள்ளன. |
| **(ஆ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்** | | |
| | (i) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது விவசாய பீடத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 67 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த அதேநேரம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகைளில் மீளாய்வாண்டின் போது கலை மற்றும் கலாசார பீடத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 120 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | மாணவர்கள் ஒதுக்கீடு/அனுமதி ஆனது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலே கையாளப்படுகிறது மற்றும் ப.க.மா. ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டே பல்கலைக்கழகமானது மாணவர்களின் அனுமதியை மேற்கொள்கிறது. |
| | (ii) மீளாய்வாண்டின் போது அனைத்துப் பீடங்களிற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27 சதவீதத்தினால் குறைவடைந்திருந்து. | |
| **(இ)** | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவருக்கான கிரயம் 48 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | குறிக்கப்பட்டது |
| **4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்** | | |
| (அ) | **நூலக நிர்வாகம்**<br><br>07 கல்விசார் பதவியணியினரால் எடுத்துச் செல்லப்பட்ட இருபத்தேழு நூலகப் புத்தகங்கள் நிர்ணயித்த காலப்பகுதியினுள் அவற்றை மீள ஒப்படைக்காமல் 01 முதல் 05 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் வைத்திருக்கப்பட்டிருந்தபோதிம், அப் புத்தகங்களை மீளப்பெறுவதற்கோ அல்லது காலதாமதத்திற்காக ரூபா 43,183 தண்டப்பணத்தினை விதிப்பதற்கோ பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>மூதவையின் ஒப்புதலுடன் சேவையிலுள்ளவர்கள் இரவல் வாங்கிய புத்தகங்களை அல்லது அபராதத் தொகையை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய ஊழியர்கள் தொடர்பில் புத்தகத்தின் பெறுமதியுடன் அபராதத் தொகையை அவர்கள் பல்கலைக்கழக சேமலாப நிதியைப் பெறுவதற்கான பத்திரங்களை சமர்ப்பிக்கும்போது கழிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) | **ஆராய்ச்சி முற்பணங்களின் தீர்ப்பனவு**<br>ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கு 2014 ஆம் ஆண்டில் 02 விரிவுரையாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 82,850 தொகையான ஆராய்ச்சி மானிய முற்பணங்கள் 2016 யூன் 30 வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்காத போதிலும் பல்கலைக்கழகம் இது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இதுபற்றி விசாரிக்கப்படும். |
| (இ) | **கற்றல்களுக்காக விடுமுறை வழங்கல்**<br>கலை மற்றும் கலாசார பீடத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த தரம்-I சிரேஷ்ட விரிவுரையாளர்ரொருவரிற்கு மேற்குறிப்பிட்ட பீடத்தில் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்கு 2010 ஒக்டோபர் 01 தொடக்கம் 2011 மார்ச் 31 வரை கொடுப்பனவுடனான கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| | (i) 2010 ஒக்டோபர் 01 இல் பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திடப்பட்ட பிணை முறி உடன்படிக்கையின் பிரகாரம், விரிவுரையாளர் அவரின் கற்கை விடுமுறை முடிவடைந்த பின்னர் 05 ஆண்டுகள் பல்கலைக்கழகத்திற்கு கட்டாயமாக சேவை செய்ய வேண்டிய போதிலும் 2014 பெப்ரவரி 11 இலிருந்து அமுலுக்கு வந்த அவரின் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் 2015 சனவரி 29 ஆம் திகதி அவர் சேவையிருந்து ஓய்வு பெற்றிருந்தார். இது தொடர்பில் பிணைதாரரிடமிருந்து ரூபா 2,534,659 பிணைமுறிப் பெறுமதியை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>(ii) விடுமுறைகள் மற்றும் விருதுகள் குழு அவரின் ஓய்வுபெறும் திகதிவரை பல்கலைக்கழக சேவைக்கான மிகுதிக் காலப்பகுதியை கருத்திற்கொள்லாமல் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்வதற்கு விரிவுரையாளருக்கு முழுக் கொடுப்பனவுடனான கற்கை விடுமுறையினை அங்கிகரித்திருந்தது.<br><br>(ii) ஏப்ரல் 20 ஆம் திகதிய 11/2011ஆம் இலக்க உயர் கல்விச் சுற்றறிக்கை மற்றும் 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், கல்விசார் பதவியணியினர் ஆராய்ச்சிப் படிகளைப் பெறுவதற்கு ஆராய்ச்சிக் குழுவின் அங்கிகாரத்துடன் ஆராய்ச்சி முன்மொழிவினை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட | கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>இந்த விடயம் தொடர்பாக ஆராயப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | விரிவுரையாளர் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக புதிய முன்மொழிவொன்றினை சமர்ப்பிக்காமல் அவரது கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கைக்காக 2011 இலிருந்து 2015 வரையான ஐந்து ஆண்டுகள் காலப்பகுதியின் போது ரூபா 923,708 கூட்டுத்தொகையான ஆராய்ச்சிப் படிகளை பெற்றிருந்தார். | |
| (ஈ) | **பிணைமுறியினை மீறுதல்**<br><br>சமூக விஞ்ஞானப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் இந்தியா சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை கற்பதற்கு 2012 மார்ச் 05 இல் உயர் கல்விக்கான தேசிய நிலையத்திடமிருந்து (என்.சீ.ஏ.எஸ்.) ரூபா 368,500 மானியத்தை பெற்றிருந்த போதிலும் 2016 யூன் 30 வரையிலும் அவர் கலாநிதி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. எனினும், உடன்படிக்கைக்கான ரூபா 368,500 பிணைமுறிப் பெறுமதியை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| **4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்** | | |
| (அ) | 2014 யூன் 24 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் பிரகாரம், 155 கணனிகள் மற்றும் 06 யூ.பி.எஸ். இன் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்ட ரூபா 4,233,370 நட்டத்தை அதற்குப் பொறுப்பான பல்கலைக்கழகத்தின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட நட்டம் 2016 மே 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>கணக்காய்வுக் குழுவினால் கூறப்பட்ட பரிந்துரைகள் 23.07.2016 இல் நடைபெற்ற 246ஆவது பேரவைக் கூட்டத்தில் குறிக்கப்பட்டதுடன், பதிவாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட 155 கணனி மற்றும் 06 யூ.பி.எஸ் கொள்வனவு தொடர்பான அறிக்கை தொடர்பில் மூன்று உறுப்பினர் கொண்ட குழுவை நியமித்து அதனை மறுபரிசீலனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது.<br><br>எனினும் மேற்படி குழுவின் அறிக்கை உரிய நேரத்திற்கு கிடைக்கப் பெறவில்லை. 29.01.2016இல் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் இது நீண்டகால தீர்மானமின்றிய விடயமாகையால் அதனை அத்துடன் முடிப்பதெனக் குறிக்கப்பட்டு பின்வருவனவற்றை கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கைக் கடிதம் வழங்குவதெனவும் முடிவெடுக்கப்பட்டது:<br><br>• முறையான விசாரணையானது சம்பந்தப்பட்டவர்கள் வேண்டுமென்றே அதனைச் செய்யவில்லையென்றும், மோசடிக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்றும் கூறுகிறது.<br><br>• இதே வேளை விசாரணையில் ஏற்பட்ட தேவையற்ற தாமதமானது குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரியொருவர் |

| | | |
|---|---|---|
| | | மரணமடைந்தமையே என அவதானிக்கப்பட்டது.<br><br>• இப் பிரச்சனையில் எவ்வித இழப்புக்களும் காணப்படவில்லை. கி.ப.கழகமானது உரிமம் பெற்ற விசைகளுக்குப் பதிலாக (License Keys) 15 கணனிகள் மற்றும் யூ.பி.எஸ். களை பெற்றுள்ளது. |
| (ஆ) | புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்ற பல்கலைக்கழகத்தின் எழுபத்து மூன்று விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் முடிவடைந்த பின்னர் கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 05 தொடக்கம் 20 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் அந்த மீதிகள் நிலுவையாக இருந்த போதிலும் உடன்படிக்கையினை முறித்துக் கொண்டமைக்காக அந்த விரிவுரையாளர்களிடமிருந்தோ அல்லது அவர்களின் பிணைதாரர்களிடமிருந்தோ ரூபா 156,535,552 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு 2016 யூன் 30 வரை பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும், முறித்துக் கொண்டவர்களிடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்குமாக 12 வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்ததென உபவேந்தர் எனக்கு அறிவித்திருந்தார். | பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>• சட்ட நடவடிக்கைகளுக்காகவும் தவறியவர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்காகவும் 12 வழக்குகளுடன் 74 எண்ணிக்கையான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது வழக்குகள் உள்ளடங்கலாக சட்டமா அதிபர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. இரண்டு அரச வழக்கறிஞர்கள் இவற்றைக் கையாளுகின்றனர். 10 மில்லியனுக்கும் அதிகமான தொகை தற்போது வரை கடப்பாட்டு ஒப்பந்தத்தை மீறியோரிடமிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.<br><br>• சட்டமா அதிபர் திணைக்களம் பத்து வருடங்களுக்கு உட்பட்ட வழக்குகள் தொடர்பில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதெனவும், பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடர்பில் பின்னர் ஆராய்வதெனவும் அறிவித்துள்ளது.<br><br>• சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் சட்ட நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுகிறது. |
| (இ) | 2014ஆம் ஆண்டிற்கான திருகோணமலை பல்கலைக்கழகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழக விருந்தினர் இல்லம், டொக்யாட் வீதி விடுதி, சிற்றுண்டிச்சாலை மற்றும் பராமரிப்பு அலகு என்பவற்றில் வைக்கப்பட்டிருந்த ரூபா 1.19 மில்லியன் பெறுமதியான 167 இருப்பு உருப்படிகள் காணாமல் போயுள்ளதென அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104இன் பிரகாரம் இழப்புக்களின் காரணங்களைக் கண்டறிவதற்கும் அத்தகைய இழப்புக்களிற்கான பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>திருகோணமலை வளாகத்தில் நிர்வாகப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், காணாமல்போன பொருட்கள் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், புதிய ஊழியர்கள்/உத்தியோகத்தர் இது தொடர்பில் தெரிந்திராததால் கணக்கிருப்பு ஆய்வின்போது இது கண்டு பிடிக்கப்படவில்லை.<br><br>கண்டுபிடிப்புக்களுக்கு அமைவாக, 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வின் போது இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| **4.4 ஒப்பந்த நிர்வாகம்** | | |
| **திருகோணமலை வளாகத்தில் விளையாட்டு மைதானம்** | | |
| | 2014 ஏப்ரல் 19 ஆம் திகதி விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரரொருவருக்கு ரூபா 32,447,463 கிரயத்தில் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 24,765,167 கூட்டுமொத்தமான கொடுப்பனவுகளை பெற்ற பின்னர் ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளை கைவிட்டிருந்தார். எவ்வாறாயினும், செல்லுபடியான காலத்தினுள் செயலாற்றல் பிணைமுறியினை காசாக்குவதற்கும் ஒப்பந்தகாரரை கறுப்புப் பட்டியலிடுவதற்கும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கிடைக்கப்பெற்ற பதிவுகளிலிருந்து செயற்திறன் பத்திரத்தின் மதிப்பு ரூபா 1,625,00000 ஆகும். பௌதீக மற்றும் நிதி வளர்ச்சி/முன்னேற்றம் 85% மற்றும் 76% ஆகும். மேலும், வேலைகள் பொறியியலாளரின் வேலை நடைபெற்றமைக்கான சான்றிதழ் ரூபா 28,919,262.29 மற்றும் உண்மையாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 24,765,167.38. இதனால் எவ்வித இழப்புக்களும் இது தொடர்பில் ஏற்படவில்லை. |
| **4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்** | | |
| | 19 பேராசிரியர்களின் பதவிகள் மற்றும் 65 சிரேஷ்ட விரிவுரையாளர்களின் பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் நிலவியிருந்ததுடன் இந்த நிலைமை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மோசமானதாக பாதித்திருந்த போதிலும் 2016 யூலை 31 வரையிலும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழகம் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>2012ஆம் ஆண்டு முதல் பல தடவைகள் பல்கலைக்கழகமானது கல்வி மற்றும் கல்வி சார் பதவிகளுக்கு விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்கள் பின்வரும் காரணங்களுக்காக செய்யப்படவில்லை<br><br>• சில துறைகளுக்கு பெருத்தமான தகுதியுடன் விண்ணப்பதாரிகள் எவரும் விண்ணப்பித்திருக்கவில்லை.<br><br>• பல்கலைக்கழக முறைமையில் குறைந்தளவு ஊதியத் தொகையே வழங்கப்படுவதன் காரணமாக மருத்துவப் பிரிவின் கீழ் தகுதி பெற்றவர்களிடமிருந்து பதில் மிகவும் குறைவாகவே இருந்தது.<br><br>• சில பேராசிரியர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் சௌக்கிய பராமரிப்பு பீடத்தினால் ஏழாட்டை விடுமுறை பேராசிரியர் / சிரேஷ்ட விரிவுரையாளர்களினால் நிரப்பப்பட்டுள்ளது. |
| **4.6 சொத்து முகாமைத்துவம்** | | |
| (அ) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2.875 மில்லியன் கிரயத்தில் "மென்படல செயலிகளின் எட்டு துணைப்பாகங்கள்" என அழைக்கப்படும் மருத்துவ உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மென்படல செயலிகளின் பிரதான பாகத்தை கொள்வனவு செய்வதற்குத் தவறியமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து இந்த உபகரணம் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் விளைவற்றிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>இழை பதப்படுத்தல் அலகின் பிரதான பகுதியை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2012 யூலை 04 இல் பல்கலைக்கழகத்தால் ரூபா 2,994,370 பெறுமதியான ‘‘பிணம் குளிரூட்டும் அறை’’ என அழைக்கப்படும் மருத்துவ உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டு மனித உயிரியல் திணைக்களத்தின் உடற்கூறியல் ஆய்வுகூடத்திற்குக் கையளித்திருந்த போதிலும் பல்கலைக்கழகம் மேற்குறிப்பிடப்பட்ட உபகரணத்தை செயற்படுத்துவதற்கு 10 கிலோவாற்ஸ் யூ.பி.எஸ். ஐ வழங்கியிருக்கவில்லை. அதன் விளைவால், 2016 ஏப்ரல் வரை அது விளைவற்றிருந்து. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>அது கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பாவனையில் உள்ளதுடன், மின்சார தளம்பல் நிலை காரணமாக அதன் செயற்பாடுகள் தற்காலிகமாக குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்திவைக்கப்பட்டது. இது 10 கிலோவாற் யூ.பி.எஸ். நிறுவப்பட்டதன் பின் செயற்பாட்டில் உள்ளது. |
| **5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்** | | |
| **5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** | | |
| | 2003 யூன் 02 ஆந் திகதிய பி.ஈடீ/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கன நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்விற்காகச் சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்திக் நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியிலேயே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>2015ஆம் ஆண்டிற்கான நிதியறிக்கை 2015ஆம் ஆண்டு பெப்ரவரி இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டு 24.03.2015ல் நடைபெற்ற பேரவையின் 263ஆவது கூட்டத்தில் அங்கிகரிக்கப்பட்டது. |
| **5.2 கூட்டிணைந்த திட்டம்** | | |
| | 2003 யூன் 02 ஆந் திகதிய பி.ஈடீ/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் முன்னைய மூன்று வருடங்களிற்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அடையப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதிகள் சுட்டிக்காட்டப்பட்டு இருக்காததால் கூட்டிணைந்த திட்டம் வருடாந்த செயன்முன்னேற்றத்தை மதிப்பிடக்கூடய வகையில் தாயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>நிதி மதிப்பீடானது கூட்டு நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்படும் அத்துடன் எதிர்காலத்தில் இது மதிப்பீடு செய்யப்படும் |
| **5.3** செயல் நடவடிக்கைத் திட்டம் | | |
| (அ) | 2014 பெப்ரவரி 17ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாண்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அமைப்புக் கட்டமைப்பு, தற்போது | குறித்துக்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |
| | அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கவில்லை. | |

<table>
<tr><td>(ஆ)</td><td>மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பௌதீகரீதியான செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான செயலாற்றல் அறிக்கைகளை பல்கலைக்கழகம் தயாரித்திருக்கவில்லை.</td><td>குறித்துக்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் சீர்செய்யப்படும்</td></tr>
<tr><td>(இ)</td><td>பல்கலைக்கழகம் மீளாய்வாண்டிற்கான அதன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கலை மற்றும் கலாச்சார பீடத்தினை இணைத்திருக்கவில்லை.</td><td>இது கவலையீனத்தால் ஏற்பட்டதாகும், அடுத்த வருட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இது சேர்த்துக்கொள்ளப்படும்.</td></tr>
<tr><td colspan="2">5.4 கொள்வனவுத் திட்டம்<br><br>கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1.(அ) மற்றும் 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது முன்று ஆண்டு காலப்பகுதியினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒரு ஆண்டு காலப்பகுதிக்கான பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.</td><td>ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>நடைமுறையில் பிரதான கொள்வனவுத் திட்டமானது ஒருவருடத்திற்கே தயாரிக்கப்படுகிறது. எனினும் 2015ஆம் ஆண்டு முதல் கொள்வனவு வழிகாட்டல் வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படும்.</td></tr>
<tr><td colspan="2">5.5 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்<br><br>2015 யூன் மாதத்தில் வழங்கப்பட்ட 24 கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் பெறப்பட்டிருக்கவில்லை.</td><td>ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>ஆறு ஐயவினாக்களில் மூன்றுக்கான பதில் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் எஞ்சிய கேள்விகளுக்கான பொருத்தமான தகவல்களைப் பெறும் நடவடிக்கை செயற்பாட்டில் உள்ளது. விரைவில் அவற்றுக்குப் பதிலளிக்கப்படும்.</td></tr>
<tr><td colspan="2">6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்<br><br>கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.<br><br><table><tr><td>(அ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு</td><td>முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் வெளிப்படுத்தல்</td></tr><tr><td>(ஆ) ஒப்பந்த நிர்வாகம்</td><td>தாமதக் கட்டணங்களின் அறவீடு, கால நீடிப்பிற்கான அனுமதி, ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுடனான இணக்கப்பாடு.</td></tr></table></td><td>குறித்துக்கொள்ளப்பட்டது</td></tr>
</table>

**பேராசிரியர் ரி. ஜெயசிங்கம்**
உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம்